

மெட்ரோ ரெயில் போக்குவரத்துக்காக வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரை புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்த்தப்பட்ட பாதையில் மெட்ரோ ரெயிலை இயக்கி சோதனை நடத்தப்பட்ட போது எடுத்தபடம்.

### வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோநகர் இடையே

# மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

## ஜனவரி இறுதியில் ரெயில் போக்குவரத்தை தொடங்க வாய்ப்பு

சென்னை, டிச.28–

வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில் பாதையில் மெட்ரோ ரெயிலை இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. ஜனவரி இறுதியில் இந்த பாதையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்தை தொடங்க வாய்ப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

சென்னை வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் இடையேயான 9.051 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் விரிவாக்கப்பணிகள் தற்போது முடிக்கப்பட்டு உள்ளது. இந்த மெட்ரோ ரெயில் பாதையில் தியாகராஜர் கல்லூரி, தண்டையார்பேட்டை ஆகிய 2 ரெயில் நிலையங்கள் சுரங்கப் பாதையிலும், புதுவண்ணாரப்பேட்டை, சுங்கச்சாவடி, காலடிப்பேட்டை, திருவொற்றியூர் தேரடி, திருவொற்றியூர், விம்கோநகர் ஆகிய 6 ரெயில் நிலையங்கள் உயர்த்தப்பட்ட பாதையிலும் அமைக்கப்பட்டு உள்ளன.

பணிகள் முடிக்கப்பட்ட இந்த ரெயில் பாதையில் நேற்றுமுன்தினம் டீசல் என்ஜினை இயக்கி தண்டவாளத்தின் உறுதி தன்மை ஆய்வு செய்யப்பட்டது. இந்த சோதனை வெற்றி பெற்றதை தொடர்ந்து, இந்த பாதையில் நேற்று மெட்ரோ ரெயிலை இயக்கி அதிகாரிகள் சோதனை ஓட்டம் நடத்தினர்.

### சோதனை வெற்றி

இதற்காக வண்ணாரப்பேட்டையில் இருந்து நேற்று காலை 10 மணி அளவில் புறப்பட்ட சோதனை ஓட்ட மெட்ரோ ரெயில் என்ஜினில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ், இயக்குனர்கள் (திட்டங்கள்) ராஜீவ் நாராயணன் திவேதி, (அமைப்புகள் மற்றும் செயல்பாடுகள்) ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்ட அதிகாரிகள் சென்றனர்.

சுரங்கம் மற்றும் உயர்த்தப்பட்ட பாதையில் உள்ள ரெயில் நிலையங்களில் ரெயிலை நிறுத்தியும், தொடர்ந்து இயக்கியும் சோதனை செய்தனர். இந்த சோதனை வெற்றிகரமாக இருந்ததாக அதிகாரிகள் கூறினார்கள்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

### தயார் நிலையில் பாதை

வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே அமைக்கப்பட்டுள்ள 2 பாதைகளிலும் மெட்ரோ ரெயிலை இயக்கி சோதனை நடத்தினோம். இதில் சுரங்கம் மற்றும் உயர்த்தப்பட்ட பாதையில் மெட்ரோ ரெயிலை இயக்குவதற்கு தயார் நிலையில் இருப்பது தெரியவந்து உள்ளது.

தற்போது ஒரு சில உயர்த்தப்பட்ட ரெயில் நிலையங்களில் மேற்கூரை அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஜனவரி முதல் வாரம் வரை இந்தபாதையில் மெட்ரோ ரெயிலை தினசரி இயக்கி சோதனை நடத்தப்படும். அதில் ஏதேனும் குறைபாடுகள் தெரியவந்தால் நிவர்த்தி செய்யப்படும்.

### ஜனவரி இறுதியில்...

ஜனவரியில் ரெயில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வுக்கு பிறகு ஜனவரி இறுதியில் இந்த பாதையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்தை தொடங்க வாய்ப்பு உள்ளது.

இதனால் திருவொற்றியூர் விம்கோ நகரில் இருந்து சென்னை விமான நிலையத்துக்கு சராசரியாக ஒரு மணி நேரத்தில் ஒரே ரெயிலில் சென்றுவிட முடியும். இதன் மூலம் கோயம்பேடு, விமான நிலையம், எழும்பூர், சென்டிரல் ரெயில் நிலையங்களும் வட சென்னையுடன் இணைக்கப்படுகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.